787

உழவர் நாடு

மாதப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 JUN 1949
MADRAS

787
2-49

உலகப் பெரியார் உத்தமர் காந்திஜீ.

ஆசிரியர்: N. S. அழகர்சாமி.
முத்துராமலிங்கபுரம்.
கல்லூரணி P. O.

Regd No. 1949 விலை 3 அணா.

பதிப்பகம்:
ஸ்ரீ சத்தி பிரஸ், அருப்புக்கோட்டை.

OFFICE OF THE REGISTRAR OF ...
1 JUN 1949
MADRAS

"உழவர் நாடு"

(மாத வெளியீடு.)

ஆசிரியர்: N. S. அழகர்சாமி.

முத்துராமலிங்கபுரம், கல்லூரணி P. O.

உழவு 1.	விரோதி ௵ ஆனி ௴ (15—6—49)	விளைவு 1.

நமது தோற்றம்.

இந்நாளில் சமூக, அரசியற்றுறையிற் பணியாற்ற பற்பல, மாத, வார, தினஇதழ்கள் பெருவாரியாக வெளி வருகின்றன. இதுமட்டுமல்ல; கலை முன்னேற்றத்திற்காகவும், இயலிசைப்பகுதியின் வளர்ச்சிககாகவும், அறிஞர் பலர், நல் இதழ் பல நடாத்துகின்றனர். இந்நிலையில், இந்நாட்டில் மட்டுமல்ல உலகில் எந்நாட்டிலுமே, நாட்டு முன்னேற்றப் பாதையில் பாடுபடும் அறிஞர்களுக்கும், என் மானிடவர்க்கம் அனைத்துக்குமே, உணவுப் பொருள்களுக்காக, அல்லும் பகலும், அனவரதமும்; காடுகளிலும் கழனிகளிலும், கல்லிலும் முள்ளிலும், வயலிலும், வரப்பிலும் வாடி வதங்கி ஓயாதுழைத்துவரும் 'உழவர்' சமுதாயத்தின் நலங் கருதி, அவர்களின் குறைகளை அரசியலாருக்கு எடுத்தோதி, பாடுபட்டும் பலனை அனுபவிக்காப் பாட்டாளிகளாகிய உழவர்களின் வாழ்க்கைநிலை வளம் பெறத்தக்க நிலையில் அமைய, ஆவனசெய்ய அரசியலாரைத் தூண்டி; உழவையும், உழவரையும், உழவர்தம் நாட்டையும் உய்விக்க உளம் உரம்கொண்டு, நல்லதோர் இதழினை ஆரம்பிக்க எண்ணினேம் ஆறு ஆண்டுகளாக!

'எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
திண்ணியராகப் பெறின்' — என்ற குறள்படி,

எண்ணிய எண்ணம் பழுதடையவில்லை, கவிச்சக்கரவர்த்தி கம்பன், வான்புகழ் வள்ளுவன், வரகவி பாரதி, பாரதிதாசன் போன்ற மெஞ்ஞானப் புலவர்களால், புகழப்பட்ட, நாட்டின்

முதுகெலும்பாயுள்ள; உழவர் நலங்கருதி நாம் வெளியிடும் 'உழவர் நாடு'வின் முதல் இதழ் இதோ உங்கள் கையில். இவ்விதழை தமிழ்நாட்டு விவசாயப் பாட்டாளி மக்கள், ஆதரிக்கக் கடமைப் பட்டவர்கள் என்ற உறுதி நமக்குண்டு.

நாம் குறிப்பிட்டபடி உழவர் நலம் பேணுதலே இதன் முழு நோக்காயினும், செய்தித் திரட்டு, சீர்திருத்தக் கட்டுரைகள், அறிஞர்களின் பொறுக்குமணிகள், சமூகப் பகுதி ஆயினவும் இடம் பெறும் என்பதையும் பூரிப்புடன் கூறுகின்றோம். "காரிருள் சூழ்ந்த அகத்திற்கு நல்ல கதிரொளிநீதான்" என்ற கருத்துடன் கழறுகின்றார் புரட்சிப் பாவலர் பத்திரிகைகளை நோக்கி! "பத்திரிகைத் தோன்ற தோன்ற நகரம் முன்னேறும் நாட்டின் அறிவு கொழிக்கும்" என ஒரு பெரியார் விளம்புகின்றார். சுருங்கக் கூறின் நாட்டின் முன்னேற்றம் பத்திரிகையின் பலத்தைப் பொறுத்தது; எனலாம்.

ஆகவே பொதுமக்கள் 'உழவர் நாடு' விற்கு ஆயிரக்கணக்கில் சந்தாதாராகவும், போஷகர்களாகவும், சேருவதுடன், தம் உற்றார் உறவினரையும் அவ்வாறே செய்யத் தூண்டுதலோடன்றி, வணிகரும், தொழிற்கம்பெனியாரும் விளம்பரங்களைத் தந்தும் ஆதரிக்கக் கோருகின்றோம். உழவருக்காக, உழவுத் தொழிலின் மேன்மைக்காக உழவர் நாடு பாடுபடும்! பாடுபடும்!! பாடுபடும்!!! என மும்முறைமொழிந்து, இம்முதலிதழை தமிழ் நாட்டு மக்கள் அனைவர் முன்னும் வைக்கின்றோம்:- ஆதரிப்பீர்களாக! வணக்கம்.

அறிவுக்கு உணவு.

மனிதன் எதையெதையோ கற்றுக்கொண்டிருக்கிறான். ஆனால் சேர்ந்து வாழக்கற்றுக்கொள்ளவில்லை. மனிதனால் மிக அற்பமானது என்று கருதப்படுகிற தேங்காய்நார் தூசியானது சேர்ந்துவாழக் கற்றுக்கொண்டு, பல தூசிகள் இழைகளாகி, மூன்று இழைகள் சேர்ந்து சிறு கயிறாகி, அது மூன்று சேர்ந்து பாக்கு மூட்டைக்கயிறாகி, அது மூன்று சேர்ந்து பந்தல் கயிறாகி, அதுமூன்று சேர்ந்து நீர் இறைக்கும் வால் கயிறாகி, அது மூன்றுசேர்ந்து தேர் இழுக்கும் வடக்கயிறாகி, தானே தேங்காயை உடைக்கும் அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது- மிக அற்பமான இத்தூசியினிடத்திலிருந்து சேர்ந்துவாழும் அறிவை மனிதன் பெறுவானா? பெற்றால் அவன் வாழ்வு சிறக்காதா!

சி. ஆ. பெ. விசுவநாதம்,
திருச்சிராப்பள்ளி.

ஆச்சாரியார்-பெரியார் சந்திப்பு.

நாட்டிற்கு நல்லகாலம்.

OFFICE OF THE REGISTRAR OF B
1 JUN 1949
MADRAS

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அறிக்கை.

திருவண்ணாமலையில் 14-5-49ல் பழைய நண்பர் இருவர் சந்தித்தனர். ஒருவர் இதுபோழ்து டெல்லியில் வதிபவர்; இன்னொருவர் ஈரோட்டில் வாழ்பவர். இருவருக்கும் கருத்துவேற்றுமை உண்டு. இவ்வேற்றுமை அவர்தம் நட்புக்கு கேடுசூழ்வதில்லை. இஃது இக்கால தென்னாட்டுக்கு ஒரு நல்லபாடம் கற்பிப்பதாகும். திருவண்ணாமலை சம்பாஷணையின் சாரம் டெல்லியார் பேச்சிலும், ஈரோட்டார் அறிக்கையிலும் வெளிவந்தது. இரண்டும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. பேச்சும் அறிக்கையும் சம்பாஷணையின் பருமை என்றும், இனி அதன் நுண்மை நாளுக்குநாள் முகிழ்க்கும் என்றும் ஊகிக்கிறேன்.

தென்னாட்டு இக்கால நிலைமையை விளக்கவேண்டுவதில்லை. நமது திருநாட்டை அரித்தும் எரித்தும்வரும் பிணக்கு, பிளவு, பூசல் முதலியவற்றை இருவர் சந்திப்பு ஓரளவிலாதல் தணிக்குமென்று யான் நம்புகிறேன். தென்னாட்டுக்கு நற்காலம் பிறப்பதாக சிலகாலமாக யான் 'தென்னாடு' 'தென்னாடு' என்று பேசியும், எழுதியும் வருகிறேன். ஏன்?

நமதுநாடு இப்பொழுது ஒருவித விடுதலையைப் பெற்றிருக்கிறது. அவ்விடுதலை விரைவில் முழுமை எய்தவேண்டுமென்று எவரும் விரும்புவர். முழுவிடுதலையை நல்கும் ஆற்றல் சமதர்மத்திற்கே உண்டு. அத்தர்மத்திற்குப் பண்பட்ட நிலம் தென்னாடு என்பது எனது ஆராய்ச்சியிற்போந்த உண்மை. சமதர்மவிதை முதல் முதல் தென்னாட்டில் விதைக்கப்படின், பெருநலம் விளையும். அந்நலம் வடநாட்டை வயப்படுத்தி, தன்வண்ணமாக்குமென்பது எனது நம்பிக்கை. இதனால் இந்தியாவில் சமதர்மம் இன்பத்தேன் பிலிற்றும்நிலை ஏற்படலாம். இந்திய அரசாங்கம் தென்னாட்டுக்கு ஒருவாய்ப்பை அளித்துப்பார்க்க எண்ணுமா? எண்ணின் இந்தியா முழு விடுதலை அடையும்.

யான் விரும்பும் சமதர்மம் எது? இதைத் தென்னாட்டவருக்கு யான் புதுமுறையில் விளக்கவேண்டியதில்லை. மார்க்ஸியமும், காந்தியமும் கலந்த ஒன்றே யான் விரும்பும் சமதர்மம். இதுவே நாட்டுக்குத் தேவை என்று யான் பலமுறை அறிக்கை செய்துள்ளேன். திருவண்ணாமலை ஒரு புத்துணர்ச்சியை தென்னாட்டுக்கு வழங்கும் என்னும் உறுதி எனக்கு ஏற்பட்டுவிட்டது. இவ்வேளையில் தென்னாட்டின் ஒருமைப்பாட்டுக்கு முயலவேண்டுவது அறிஞர் கடமை. இதற்குப் பத்திரிகைத்துணை இன்றியமையாதது. கட்சிப்பத்திரிகையுலகம் கருணைபுரிவதாக.

எனக்குக் கொள்கை உண்டு ஆனால் கட்சியில்லை. எக்கட்சி அழைப்பினும் அதற்கிணங்கி அக்கட்சி மேடையில் என் கொள்கையைவெளியிடுவேன். சன்மார்க்கத்தை ஓம்பும் சமதர்மம் எனது கொள்கை. இது சான்றோர் அளித்த செல்வம். இஃது உலகை ஒருகுலமாக்கும் என்று யான் உணர்கிறேன். எனது பருவுடல் வலிமை இழந்துகிடக்கிறது. ஆனால் எனது நுண்ணுடல் கொழுமை பெற்றிருக்கிறது. அது டெல்லியிலும் பறக்கும், ஈரோட்டிலும் பறக்கும்; பறந்து பறந்து, பறந்து பலநுட்பங்களை உணரும்.

இமயவரம்பினின்றும் மானதச் செய்திகள் வருகின்றன அவை எனது அகப்புலனுக்கு விருந்தாகின்றன. அவ்விருந்தை உண்டு, உண்டு, "தென்னாடு ஒருமைப்படுவதாக; வடநாடு மனம் திரும்புவதாக; இந்தியா தர்மநாடாவதாக; உலகில் ஒரே தர்மம் விளைத்து வளர்வதாக." என்று பரம் பொருளை வழுத்தியவண்ணமிருக்கிறேன்.

நமது நன்கொடையாளர்கள்.

சோ. ச. சங்கம ரெட்டியார், வள்ளியூர். ரூ. 25.
P. S. திருவேங்கிடம், அழகியநல்லூர். ரூ. 5.
எ. கு. வேங்கிட்டரெட்டியார் அழகியநல்லூர். ரூ. 20.
தி. நா. அ. வேங்கிடசாமி பிரஸிடெண்ட்,
P. B. B. முத்துராமலிங்கபுரம். ரூ. 10.

★ ஏரும் சீரும் ★

திரு R. P. சேதுப்பிள்ளை அவர்கள்.

நாட்டில் வாழும் உயிர்கள் வயிறார உண்பதற்கு வேண்டிய விளைபொருள்களைத் தப்பாமல் தரும் நாடே 'நாடு' என்னும் பெயருக்குரியது. நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாக பயிர்த் தொழிலை போற்றி வாழும் நாடு தமிழ் நாடு. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர், என்றார் திருவள்ளுவர். இல்லறம் துறவறம் என்னும் இருவகை அறங்களும், குடியரசு முடியரசு என்னும் இருவகை அரசும் நன்கு நடைபெற வேண்டுமானால் உழவுத் தொழில் ஊக்கமாக நடக்கவேண்டும் என்பது தமிழ் நாட்டார் கொள்கை. "அரசரது செங்கோலை நடத்தும் கோல் உழவர் ஏரடிக்கும் சிறுகோலே" என்று பாடினார் கம்பர். இன்னும் வீரரையும் புலவரையும் உழவர் என்றுகூற ஆசைப்பட்டனர் பண்டைக்கவிகள். வில்லைஎடுத்தாளும் வீரனை 'வில்லேர் உழவன்' என்றும், சொல்லை எடுத்தாளும் வீரனை சொல்லேர் உழவன் என்றும் குறித்தார் திருவள்ளுவர்.

"வில்லேர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க சொல்லேர் உழவர் பகை" என்பது திருக்குறள், வில்லினும் சொல்லே வலியுடைது என்னும் கருத்தை இவ்வாறு கூறுகின்றார் வள்ளுவர். வேற்படை தாங்கிய வீரனை 'அயில் உழவன்' என்றும் வாளேந்திய வீரனை 'வாள் உழவன்' என்றும் குறித்துள்ளார்கள். இங்ஙனம் உயர்ந்தோர் பலரையும் உழவராகக்கண்ட நாடு இவ்வுலகில் வேறு உண்டோ? பயிர்த்தொழில் செய்வதற்கு இன்றியமையாத கருவி ஏர் ஆகும் சீரெல்லாம் தருவது ஏர். ஆதலால் சீரைத்தேடின் ஏரைத் தேடு என்று பணித்தார்கள். ஏர் என்ற சொல்லுக்கே அழகு என்னும் பொருளை அமைத்தார்கள். அழகும் இளமையும் வாய்ந்த கிளியை 'ஏர் ஆர் இளங்கிளியே' என்று அழைத்தார் மாணிக்கவாசகர். ஏர் என்பது, கலப்பை. கோணமானலான கலப்பையில் அழகைக் கண்டனர் தமிழர். ஏர் கண்ணுக்கு இனியதன்று; ஆனால் கருத்திற்கு இனியது. பயனுடைய ஏரை

அழகுடைய பொருளாகக்கண்ட பெருமை பண்டைத்தமிழருக்கு உரியது. ஏருடையரே சீருடையார் என்று பாவலர் பாட்டிசைத்தார்கள். கம்பர் ஏர்த்தொழிலின் பெருமையைக் குறித்து எழுபது பாட்டுப்பாடினார். போர்க்களம் பாடும் புலவரைப் போலவே, ஏர்க்களம் பாடும் புலவரும் ஏராளமாகப் பரிசுபெற்றார்கள்.

ஏர்த்தொழிலை ஆதரித்தனர் தமிழரசர், ஆற்று வெள்ளத்தை பயிர்த்தொழிலுக்குப் பயன் படுத்துமாறு அணைகள் கட்டினர் வாய்க்கால்கள் வெட்டினர். குளங்கள் அமைத்தனர், காடுகளைத் திருத்திக் கழனியாக்கினர்; சோழ நாட்டு மன்னராகிய திருமாவளவன், "காடு கொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம்பெருக்கினான்" என்று பட்டினப்பாலை கூறும். இவ்வாறு மன்னர் ஏர்த்தொழிலுக்காக அமைத்த குளங்கள், ஏரி என்று பெயர் பெற்றன. ஏரியின் அருகே எழுந்த ஊர்கள் பலவாகும் பொன்னேரி என்பது ஒரூரின் பெயர். தென்னேரி என்பது மற்றொரு ஊர்ப்பெயர். இன்னும் ஏரிலே பூட்டும் காளைமாடுகளை (ஏர்து) எருது என்றார்கள். ஏர்த்தொழிலால் பண்படும் நிலத்தை வலுப்படுத்தும் உரத்திற்கு, எரு என்று பெயரிட்டார்கள்.

ஏராலே சேராக்கி எருவாலே கருவாக்கி நீராலே பைங்கூழை நிலைப்பிப்பார் என்பது கம்பர் கவி. எனவே ஏர், ஏரி, எருது, எரு ஆகிய நான்கும் ஓரடியினின்று பிறந்த சொற்களே என்று அறிகின்றோம். திராவிட மொழிகளுள் ஒன்றாகிய துளுவத்தில் எரு என்னும் சொல், எருதைக் குறிக்கின்றது. ஆகவே நிலத்தைப் பண்படுத்துவது ஏர்; நீரூட்டி வளர்ப்பது ஏரி; உணவூட்டி உரம் படச்செய்வது எரு. இம் மூன்றும் சீராக அமைந்தால் உணவுக்கு ஒரு நாளும் பஞ்சமில்லை.

வியாபாரத்தை விளம்பரம்

மூலம் விருத்திசெய்யுங்கள்.

நமது காரியாலயத் திறப்பு விழா.

மாஜிப் பிரதமர், மக்கள் தலைவர், திரு O. P. ராமசாமி ரெட்டியார், திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவராயிருந்த மடத்துப்பட்டி திரு கோபால்சாமி நாயக்கர், திரு S. ஜெயராம் ரெட்டியார் B. A, M. L. C, திரு. அ. வெ. திருப்பதி ரெட்டியார் ரெட்டிமகாஜன சங்கத் தலைவராயிருந்த K. S. N. N. நாருயண ரெட்டியார் ஆகியவர்கள், 9—6—49உ காலை 9.15 மணிக்கு முத்துராமலிங்கபுரத்திற்கு விஜயம் செய்தனர். ஆயிரக்கணக்கான விவசாயமக்கள், மக்கள் தலைவர்களை எதிர்கொண்டு அழைத்து பஞ்சாயத்து போர்டு ஆபீஸிலிருந்து, தலைவர்களை ஊர்வலமாக அழைத்துச்சென்றனர்.

அதன்பின்பு குரூப் போட்டோ ஒன்று எடுக்கப்பட்டது. பிறகு விழாவுக்கென அமைக்கப்பட்ட பந்தலில், திரு ம. கோபால் சாமிநாயக்கர் தலைமையில், மக்கள் தலைவர் திரு O. P. ராமசாமி ரெட்டியார் அவர்களால், காரியாலயம் திறக்கப்பட்டது.

(சொற்பொழிவு விபரம் அடுத்தவெளியீட்டில் வரும்.)

அதன்பின் நமது ஆசிரியர் திரு N. S. அழகர்சாமி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு விழா இனிது முடிந்தது.

தலைவர் ராமசாமியாருக்கு பலஸ்தாபனங்களால் வரவேற்பு பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. அதன்பின், இவ்வூர் பள்ளிக்கூடம், கோயில், பாலம், வாசகசாலை முதலியவைகளை பார்வையிட்டார். கடைசியாக, மக்களின் வாழ்த்து ஒலியுடன், மக்கள் தலைவர் ராமசாமி ரெட்டியார், தன் சகாக்களுடன் பொம்மாகோட்டை அரசியல் மகாநாட்டிற்குத் தலைமைவகிக்க 10½ மணிக்கு கிளம்பிச் சென்றார்.

விவசாயப் பழமொழிகள்.

(பேரையூர். சுப்பிரமணியம்.)

1 உழவற உழுதவன் ஊரில் பெரியவன்.
2 ஏரோட்டுவதினும் எருவிடுதல் நன்று.
3 ஆடுவைத்தலினும் ஆழ உழுதலே நலம்.
4 அடைத்தவன் காட்டைப்பார். மேய்த்தவன்மாட்டைப்பார்.
5 தன் ஆளில்லா வேளாண்மையும், தானுழாத நிலமும் தரிசு.
6 மேல்மினுக்கியைக் கொண்டவனும், மேட்டிலே பயிரிட்டவனும் கெட்டான்.
7 மேலைக்கு உழுவார், கூழுக்கு அழுவார்.
8 ஏரினுநன்றும் எருவிடுதல், கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு.
9 உள்ளூர் பெண்ணும் அயலூர் மண்ணும் ஆகாது.
10 காடுவெட்டி நஞ்சை பண்ணு, மாடுகட்டி வைக்கோல்போடு
11 பாராதே கெட்டது பயிர், ஏறாதே கெட்டது குதிரை, கேளாதே கெட்டது கடன்.
12 தெய்வத்துக்குச் செய்வதும், செய்க்குராம் போடுவதும் பழுதல்ல.
13 உழுகிறநாளில் ஊர்சுற்றி, அழுகிறநாளில் ஆள்தேடின் பயன் என்ன?
14 அடங்காப் பெண்டிரைக் கொண்டவனும் கெட்டான். அழுகங்காட்டை உழுதவனும் கெட்டான்.
15 அழுதுகொண்டிருந்தாலும் உழுதுகொண்டிரு.
16 கொண்டு வாரம் கொடுத்தவனும், உழுது வாரம் கொடுத்தவனும் கடைத்தேறமாட்டான்.
17 பாப்பன் பயிரிழந்தான், இரப்பன் பெண்டிழந்தான்.
18 கழனிக்கு அண்டை வெட்டிப்பார்.
கண்ணுக்கு மை இட்டுப்பார்.
19 தொழில் இல்லாதவன் தோட்டம் செய்.
20 தானம் தவமிரண்டுந் தங்காவியனுலகம்; வானம் வழங்காதெனின்.

வாழ்த்துச் செய்திகள்.

சென்னை, மராமத்து மந்திரி. கனம். பக்தவத்ஸலம் அவர்கள்

அன்புள்ள நண்பருக்கு

ஜூன்மீ 15உ வெளிவரும் தங்கள் 'உழவர் நாடு' நம்நாட்டுச் செல்வத்தை வளர்க்கும்; உழவருக்கு ஊன்றுகோலாக இருக்குமென்று நம்புகிறேன்.

தங்களன்புள்ள,

28—5—49 (ஒப்பம்.) எம். பக்தவத்ஸலம்.

* * *

சென்னை, கைத்தொழில்மந்திரி கனம் பெருமாள்சாமி ரெட்டியாரவர்கள்

Dear Mr. Alagarsamy,

Thank. you for your kind letter of the 26th, Iam glad that, you bringing out a new journal 'Ulaver Nadu' on 15th June. I wish the journal, all success.

yours Sincerly

30-5-49 (Sd.) C. Perumalsamy Reddiar.

* * *

சேலம். டாக்டர். P. வரதராஜுலு நாயுடு அவர்கள்

Dear Mr. Alagarsamy

I thank you for your letter and Iam glad you propose to publish a bi-monthly journal 'Ulaver Nadu' devoted to the cause of the agriculturalists. yours is a noble idea and I wish you every success. Our farmers are illiterates and so your language should be simple and clear, so that they can understand what you write

With best wishes.

yours sincerly,

25-5-49. (Sd.) Dr. P. Varadarajalu Naidu.

திருச்சிராப்பள்ளி, திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்

ஆசிரியரவர்கட்கு வணக்கம்,

'உழவர் நாடு' என்ற பெயரால் ஒரு திங்கள் இதழ் தோன்றுவதுகுறித்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். அது நன்கு வளர்ச்சியடைந்து, பொதுவாக உழவுத்தொழிலுக்கும், தமிழ் நாட்டிற்கும் மொழிக்கும், மக்களுக்கும் தொண்டு செய்து சிறப்படைய வேண்டுமென பெரிதும் ஆசைப்படுகிறேன்.

தங்களன்பிற்குறிய

7—5—49

கி. ஆ. பெ. விசுவநாதம்,

*   *   *

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. காமராஜ் அவர்கள்

நண்பர் N. S. அழகர்சாமி அவர்கட்கு

வணக்கம், தாங்கள் ஆரம்பிக்கும் 'உழவர் நாடு' சிறப்புடன் விளங்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். உழவரின் உண்மையான நலங்களை வளர்க்க தங்கள் பத்திரிகை பாடுபடுமென்று நம்புகிறேன்.

தங்களன்புள்ள,

30—5—49

(ஒப்பம்) K. காமராஜ்,

*   *   *

திருவண்ணாமலை (வட ஆற்காடு)

மாஜி M. L. C., M. B. ரெங்கசாமி ரெட்டியாரவர்கள்

நலம். அன்புள்ள அழகர்சாமி அவர்களுக்கு வணக்கம்.

க்ஷேமம். தாங்கள் துவக்கப்போகும் 'உழவர் நாடு' என்னும் பத்திரிகை பெரிதும் உழவர்களுக்கும், உழவர் வகுப்பினராகிய நம்மைப்போன்றவர்கட்கும் பணிசெய்யுமென்று நம்புகிறேன். இப்பத்திரிகையானது பொதுத்தொண்டிற்கு உழைக்குமென்பதை பற்றி சந்தேகமில்லை. இப்பத்திரிகை மென்மேலும் வளர்ச்சியடையவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். என்னால் வேண்டுமான உதவி இதன் முன்னேற்றத்தில் செய்கிறேன்.

3—6—49

(ஒப்பம்.) M. B. ரெங்கசாமி ரெட்டியார்,

பிரஞ்சிந்திய தேசீய காங்கிரஸ் தலைவர்

திரு R. புருஷோத்தம ரெட்டியார் அவர்கள் (புதுச்சேரி.)

திரு N. S. அழகர்சாமி அவர்களுக்கு வணக்கம்.

"உழவர் நாடு" என்ற மாதப் பத்திரிகை தங்களை ஆசிரியராக கொண்டு, வெளிவரப்போகும் செய்தி மிக மகிழ்ச்சி தருவதாய் இருக்கிறது. இந்தியாவின் முன்னேற்றம் பெரும்பாலும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சாஸ்திரீய முறையில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய, ஆக்கமளிக்கும் பத்திரிகைகள் நம் நாட்டில் இல்லாததால் அக்குறையை ஓரளவில் "உழவர் நாடு" நிவர்த்திக்குமென நம்புகிறேன்.

நம் நாட்டிலும் பல விவசாயப் பண்ணைகள், விவசாயக் கல்லூரிகள், வெளி நாடுகளில் நடத்தப்படும் கூட்டுப் பண்ணைகள் ஆகியவற்றின் ஆராய்ச்சிகளையும் அனுபவங்களையும்; கிராம வாசிகளுக்கு பயன்படுமாறு செய்யும் தொண்டை தங்கள் பத்திரிகை மேற்கொள்ளுமென்றும் நம்புகிறேன்.

'உழவர் நாடு' ஓங்கி நாடெங்கும் பரவி மேழிச் செல்வத்தை காப்பாற்றவேண்டும்.

இப்படிக்கு

(Sd) ரா. புருஷோத்தமன்,

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

பழனம் பொழில்நீள் வளப்படைத்த
பதிமுத் தூராம லிங்கபுரம்
தழைய வருகல் விச்செல்வம்
சான்ற வுயர் சொற் பொழிவாளன்
அழகர் சாமி எமதன்பன்
அறிவுப் பெருக்கால் ஆய்ந்தியற்றும்
'உழவர் நாடு' தமிழ்நாடர்க்(கு)
உயர்ந்தோங்கி வாழியவே!

தி. அ. வேங்கடசாமி,

22—5—49

அழகியநல்லூர்.

விவசாயத்தொழிலாளருக்கு : :
: : வீடில்லாத் திண்டாட்டம்.

அதைத்தவிர்க்க வழிகோலப்படுகிறது.

(மாஜிப் பிரதமர். ஓ. பி. ஆர்.)

தஞ்சாவூர் ஜில்லாவில், விவசாயத் தொழிலாளராகிய ஹரிஜன மக்களும், மற்றோரும் நிரந்தரக் குடியிருப்புக்கான வீடுகள் தங்களுக்கென கட்டிக்கொள்ள காலிமனைகள் கிடைக்காமல் பெருந்துந் துன்பம் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுள் ஒருசிலர் சர்க்காரின் புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வருகிறார்கள்; பெரும்பாலோர் மிராசுதாரர்களுக்குச் சொந்தமான நிலங்களில் கட்டப்பெற்றுள்ள வீடுகளில் வசித்து வருகிறார்கள். ஜில்லாவில் அநேக இடங்களில் சிதறுண்டுகிடக்கும் 710 எக்கர் விஸ்தீரணமுள்ள சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் கட்டப்பெற்ற வீடுகளில் சுமார் 12000 குடும்பத்தார் குடியிருந்து வருகிறார்கள். மிராசுதாரர்களுக்குச் சொந்தமான மனைகளில் சற்றேறத்தாழ 1¼ லக்ஷம் குடும்பத்தார் குடித்தனம் செய்கிறார்கள்.

மூலாதாரத் தேவை:- தொழிலாளருக்குரிய இந்த மூலாதாரத் தேவையைத் திருப்திகரமாக நிறைவேற்ற சர்க்கார் தங்களாலான முயற்சி எடுத்துக்கொள்ள தீர்மானித்திருக்கிறார்கள். அத்தீர்மானத்தையொட்டி, தற்காலம் ஷை தொழிலாளர் குடியிருந்து வரும் 710 எக்கர் சர்க்காரின் புறம்போக்கு நிலங்களை அவாவர்களுக்கே ஜாரிசெய்து விடும்படியாகவும், 825 எக்கர் விஸ்தீரணமுள்ள சர்க்காரின் புறம்போக்கு நிலங்களில் கூடுமானவற்றை அந்நிலங்களுக்கு அருகில், மிராசுதார்களின் நிலங்களில் வசித்து வரும் தொழிலாளர்களுக்கு ஒப்படைக்கவும், சர்க்கார் ஜில்லா கலெக்டர்களுக்குக் கட்டளை பிறப்பித்துள்ளார்கள்.

ஒவ்வொரு தொழிலாளர் குடும்பத்துக்கும் 7 செண்டுகள் வீதம் நில மதிப்பும் இதர செலவுகளும் இல்லாமல் நிலங்கள் ஜாரி செய்யப்படும்.

கிடைக்கக்கூடிய எல்லாபுறம்போக்கு நிலங்களையும் சர்க்கார் இவ்விதம் விவசாயத் தொழிலாளருக்குப் பங்கிட்டுக் கொடுத்த போதிலும், இன்னும் ஒரு லட்சம் குடும்பங்கள் காலிசெய்விக்கப் படுவோம் என்னும் திகிலுடன் தங்களுக்கென சொந்த வீடு இல்லாமல் வசித்துவர நேரிடுகிறது.

விவசாயத் தொழிலாளரின் பரிதாப நிலை:— இவ்வாறு வீடுகள் கட்டிக்கொள்ள காலிமனைகள் இல்லாமல் தவிக்கும் விவசாயத் தொழிலாளர்களின் பரிதபிக்கத்தக்க நிலைமைக்கிரங்கி தங்கள் சொந்த மனைக்கட்டுகளிலிருந்து காலிமனைகள் வழங்கவேண்டு மென்று தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள மிராசுதாரர்களையும் நிலச் சுவான்தார்களையும் பெரிதும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் மிராசுதார்களுக்கு விடுத்துள்ள இவ்வேண்டுகோளுக் கிணங்கி, விவசாயத் தொழிலாளருக்குத் தேவையான வீடுகட்டிக் கொள்வதற்குரிய காலிமனைகளை அவர்களுக்கு வழங்கத்தகுந்த திருப்திகரமான ஏற்பாடுகளை மிராசுதார்கள் மேற்கொள்ளுவார்க ளென்று நான் திடமாக நம்புகிறேன்.

தேசமுன்னேற்றத்துக்கு ஜீவாதாரமாயுள்ள விவசாய விருத்திக்கு அனுகூலமானவர்களும், பிற்போக்குவாய்ந்த கஷ்டா ளிகளுமான விவசாயத் தொழிலாளர்களுக்கிடையே மனத்திருப்தி யும், சமாதான வாழ்க்கையும் நிலவுவது எவ்வளவு அத்யாவசிய மானது என்பது சொல்லாமலே விளங்கும்.

—சென்னைச் செய்தி.

தலைவன் ஆகத்தக்க சிலவழிகள்.

1 தனியே இருந்தால், தலைவராக ஒருவன் ஆகான். மற்றவர்களோடு சேர்ந்து உழைக்க ஊக்கமும், ஆர்வமும் உடையவனே தலைவனாவதற்குவேண்டிய ஒத்துழைப்பு என்னும் அருங்குணம் உடையவனாகின்றான்.

2 பொதுப்படப் பலரும் விரும்பத்தக்க, இசைபோன்ற பயிற்சி ஏதாயினும் ஒன்றில் தனியே பழகித் தேர்ச்சியடைவதும், தலைவராவதற்கு இடம் அளிக்கும்.

3 பணத்துக்குப் பிறரை அண்டாதிருத்தல் இன்றியமையாதது.

4 உயர்ந்த படிப்பு ஒருவனைத் தலைவனாக ஆக்கலாம், ஆக்காமலும் போகலாம்.

5 ஏதோ சேர்ந்தோம் ஒன்றுகூடி உழைத்தோம் போனோம் என்றில்லாமல் இடைவிடா உழைப்பும், ஊக்கமும் தம்மையொத்த பிற கழகத்தாரோடு போட்டியும் உடைய கூட்டுழைப்பு நல்ல பயன் அளிக்கும். தலைவன் ஆவதற்கு சிறந்த வழி அமைக்கும்.

6 தலைவர்கள் எல்லோருக்கும் பொதுப்பட அமையவேண்டிய ஓரியல்பு, குன்றாமல் உடல்வருந்த உழைப்பதாகும்.

7 ஒவ்வொருவனையும் ஒரு தலைவனாக வரத்தக்க வழியில், கூடி உழைக்கும் முயற்சியில் பயில்விக்கத் தவறினோம். இதுதான் தவறு.

"எங்கள் நாடு"

'உழவர் நாடு'

(மாதப் பத்திரிகை)

வருஷ சந்தா விகிதம்.

ராஜ போஷகர்	ரூ	100
போஷகர்	ரூ.	50
விசேஷ ஆதரவாளர்	ரூ.	25
ஆதரவாளர்	ரூ	10
ஸ்பெஷல் சந்தா	ரூ.	5
சாதாரணச் சந்தா	ரூ.	2
தனி இதழ்		0—3—0

"வியாபாரத்திற்கழகு விளம்பரப்படுத்துதல்."

விளம்பர விகிதம்.

அட்டை வெளிப்புறம்	ரூ.	50
,, உட்புறம்	ரூ.	30
உள் ஒரு பக்கம்	ரூ.	25
½ பக்கம்	ரூ	15

நீடித்த விளம்பரத்திற்கு எழுதியறிக.

மாதிரிப்பிரதிக்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்புக.

'உழவர் நாடு' காரியாலயம்.
முத்துராமலிங்கபுரம்.
கல்லூரணி P. O. (Via) அருப்புக்கோட்டை

ஸ்ரீ சக்தி பிரஸ், அருப்புக்கோட்டை. 49.